பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 697 **நாள்: 19.11.2026**

அடையாறு மண்டலம், கானகம், தரமணி சாலையில் உள்ள இந்து மயான பூமியில் பராமரிப்புப் பணிகள் நடைபெறுவதால், பொதுமக்கள் அருகிலுள்ள வேளச்சேரி பிரதான சாலை, பாரதி நகர் மின் மயான பூமியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-178க்குட்பட்ட கானகம், தரமணி சாலையில் உள்ள இந்து மயான பூமியில் எரிவாயு தகனமேடையில் பழுது நீக்கும் பணிகள் நடைபெறுவதால் இன்று 19.11.2026 முதல் 03.12.2026 வரை 15 நாட்கள் மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, பராமரிப்புப் பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள வேளச்சேரி பிரதான சாலை, பாரதி நகர் மின் மயான பூமியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி